**நியாகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 13 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நியாகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் உள்நாட்டுக கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனுக்காக செலுத்தியி ருந்த வட்டி ரூபா 331,378 தொகை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யாமல் கடன்தொகையில் இருந்து கழித்திருந்தமையால் செலுத்த வேண்டிய கடன் மூலதனம் அப் பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 4,707,842 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 172,600 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுவனவு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலை களுக்காக செலுத்த வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 2,029,180 இற்கான செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,239,976 தொகை யினை கணக்கீடு செய்யாமையினால் ஆண்டிற்கான வருமானம் அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிகான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,863,985 இற்கான வைப்பு மீதிகள் மற்றும் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 662,152 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலமாக காணப்படும் சமமின்மை என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 18,177,087 இற்கான நிலுவை ஏனைய வருமான மீதி ஒன்று காணப்பட்ட போதிலும், பதிவேடுகள் பேணப்படாமையால் நிலுவை மீதியின் காலப்பகுப்பாய்வு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்து பெற வேண்டிய கணக்கு மீதி களை குறைக்க வேண்டும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ii) செலுத்த வேண்டிய கணக்கு** | | |
| கடந்த 03 வருடங்களில் மேற்கொள் ளப்பட்ட செலுத்த வேண்டியிருந்த ரூபா 10,411,232 தொகையினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்ப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 116,279,460 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 131 | -- | இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 18,963,101 இற்கான சராசரி மாதாந்த மீதி காணப்பட்ட போதிலும் மிகைப் பணத்தை முதலீடு செய்து வருமானம் ஒன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிகப் பணத்தை முதலீடு செய்து சபை நிதியத்தை அதிகரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் மிகைப் பணத்தை முதலீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 387 | 1,334,630 | வங்கிக் கணக்கில் காணப்படும் மீதியை மிகைத்து காசோலைகள் எழுதப்பட்டமையால் மீளாய்வாண்டில் 04 மாதங்களில் காசேட்டின் பிரகாரம் வங்கிக் கணக்கின் மீதி பிரதிகூல மீதியொன்றாக இருந்தது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | காசேட்டில் செலவு மீதி ஒன்று ஏற்படாத வகையில் செலவுகள் மேற்கொள்வேன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 2,573,820 | காலங் கடந்த வைப்புக் களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் காலவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,435,278 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,366,313 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொழிற்படு மூலதனம் மறைப் பெறுமதியினை கொண்டிருத்தல் மற்றும் திரண்ட நிதியக் கணக்கில் வரவு மீதியொன்று காணப்படல் சபை இடையறாது நீடித்திருத்தலுக்காக சீரற்ற முறையில் பாதிக்கக்கூடும். | தொழிற்படு மூலதனத்தை அதிகரித்து திரண்ட நிதியத்தை சிறந்த நிலைமையில் வைத்திருக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,419,850 | 1,461,880 | 1,746,829 | 375,934 | 1,197,304 | 699,772 | 623,793 | 503,984 |
| வாடகை | 5,690,850 | 4,620,375 | 4,969,716 | 150,664 | 6,452,280 | 589,052 | 3,621,611 | 301,664 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 310,625 | 419,286 | 421,411 | - | 345,500 | 859,828 | 886,728 | 14,867 |
| ஏனைய வரு மானங்கள் | 35,695,672 | 34,472,853 | 35,053,168 | 12,875,615 | 39,260,692 | 29,946,212 | 27,266,241 | 8,348,986 |
| | 43,116,997 | 40,974,394 | 42,191,124 | 13,402,213 | 47,225,776 | 32,094,864 | 32,398,373 | 9,169,501 |

## 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 9,169,501 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 40,974,394 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 50,143,895 தொகையாகும். ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 42,191,124 தொகையாகக் காணப்பட்ட மையால் வருமானம் அறவீடுகள் 84 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடல் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.4 வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 151,000 இற்கான வருமானம் பதிவழிப்பது தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டியதுடன் வருமானம் பதிவழிப்பதற்கு போதியளவு மற்றும் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | வருமானங்களை பதிவழிப்பதற்குரிய சபைத் தீர்மானங்கள் சமர்ப்பிக்கின்றேன். எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள ஏனைய வருமானங்கள் ரூபா 12,875,615 தொகை யாக இருந்ததுடன், அவை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 4,526,629 தொகை அதாவது 54 சதவீத அதிகரிப்பொன்றை காட்டியது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,979,133 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,426,055 தொகை பெறவேண்டி இருந்தது. | நீதிமன்றத் தண்டப்பண வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தொகையை அனுப்பு மாறு பிரதான செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 260,000 தொகையும், மீளாய்வாண்டில் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 375,000 தொகையும் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். | 2019 ஆண்டில் அச் செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப் படாமல் சேதனப் பசளை செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2009 ஆண்டில் பிலிசரு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 1,201,655 தொகை பெற்று, செலவிடப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டு செயற்திட்டம் முற்றாக கைவிடப்பட்டிருந்தது. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்ட கால வேலைத் திட்டமொன்று தேவைப்படுகின்றது. | அரசாங்க காணி ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப் படுவதுடன், நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதவரி அறவிடக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரிப் பிரதேசங்களை பெயரிட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீடு ஒன்றின் மீது எதிர்காலத்தில் வீதவரி பிரதேசங்களை பெயர் குறிப்பிட்டு வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(i)** | **ஊழியர் வெற்றிடங்கள்** | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணித் திட்டத்தின் படி காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்துடன் கலந்துரவாடி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | பிரதியீட்டு பதவியொன்றான காவலாளி ஒருவர் செப்தெம்பர் மாதம் முதல் சேர்க்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 71,133 தொகை செலுத்தப் பட்டிருந்தது. | பிரதியீட்டு பதவியை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்கின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த கப் வண்டி ஒன்று ஹாடிமெக் இயந்திரம் ஒன்று 03 வருடங்களுக்கு மிகையான காலம் விளைவற்று சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக 2015 ஜுலை 10 ஆந் திகதிய 02/2015 இலக்க நிதி அமைச்சுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 ஆண்டின் போது காணாமல் போன ரூபா 72,980 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 52,980 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் 2017 ஆண்டில் ரூபா 19,624 இற்கான நூலகப் புத்தகங்கள் காணாமல் போதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களிடம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயமொன்றில் ரூபா 312,957 தொகைக்கான மதிப்பிடப்பட்ட முழுத் தொகையும் சேமிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 05 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 16,392,007 தொகயையான இருந்ததுடன், அப் பெறுமதி 41 சதவீதம் முதல் 77 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | 02 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 13,757,075 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 63 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசாரணை செய்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரியவாறு குழுக்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |